# இரட்டைக் காப்பியங்கள் கூறும் வணிகம்

முனைவர். த. மோகனாம்பாள்
உதவிப் பேராசிரியர்
டாக்டர். என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர் - 641048.
மின்னஞ்சல்: mohanambalsuja@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற அவ்வையாரின் வாக்கிற்கிணங்க சிலப்பதிகாரமும், மணிமேகலையும் வணிகத் தொழிலை முன்னிறுத்திப் படைக்கப்பட்டுள்ளன. இக்காப்பியங்கள் இரண்டும் வணிகம் மேற்கொள்ளும் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளன. வணிகர்கள் ஒன்றாகச் சேர்ந்து வணிகக் குழுக்களை அமைத்துச் சந்தைகள், ஏற்றுமதி இறக்குமதிகள், வரவுசெலவுகளில் தங்களுக்கென்ற வணிகப் பாதைகளை உருவாக்கிக் கொண்டு கடல் வழியாகவும் தரை வழியாகவும் வணிகத்தை மேற்கொண்டிருந்தனர். இதன் மூலம் பழந்தமிழ் மக்கள் வணிகத்தில் சிறந்து விளங்கியதையும் சமூகத்தில் மதிப்புடன் வாழ்ந்ததையும் அறிந்து கொள்ள முடிகின்றது. வணிகப் பயணங்கள் என்பது காப்பியங்களில் ஒரு முக்கியப் பகுதியாவே இருந்திருக்கின்றன. இதன் பயனாக அக்கால மக்களின் வணிகத் திறனையும், பொருளாதார வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகின்றது. காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களை புலப்படுத்துவதால் இதில் 'பொருள்' என்பது செல்வம் ஈட்டுவதையே குறிக்கின்றது.
சிலப்பதிகாரத்தில் புகார் நகரம் வணிகத்தில் சிறந்து விளங்கியது. மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலை அறம் சார்ந்த வணிகக் கோட்பாடுகளையும், நெறிமுறைகளையும் வலியுறுத்துகிறாள்.

**திறவுச் சொற்கள்:**

அறவிலை வணிகர், நாளங்காடி, அல்லங்காடி, நாவிகர்கள், நோன்பிகள்.

**முன்னுரை:**

சிலப்பதிகாரத்தில் காவிரிப் பூம்பட்டினம் வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்தது. பல வெளிநாட்டு வணிகர்களும், யவனர்களும் இங்கு வந்து தங்கியிருந்து வணிகம் மேற்கொண்டதால் சிறந்த வணிகத் துறைமுகமாக விளங்கியது. சிலப்பதிகாரத்தில் நாளங்காடி, அல்லங்காடி போன்றவை சிறந்த வணிகத்திற்கு ஊன்றுகோலாக அமைந்தன. மணிமேகலையில் பௌத்த அறநெறிகளின் அடிப்படையில் சங்ககாலத்தின் உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் மற்றும் கடல் வாணிகம்

போன்றவை அக்கால மக்களின் பொருளாதார வளத்தையும், வாணிகத்தின் முக்கியத்துவத்தையும் குறிக்கின்றது. மணிமேகலா தெய்வம் கடல் தெய்வமாகக் கடல் வாணிகம் செய்பவர்களால் வணங்கப்பட்டுள்ளது இவ்வாறு வணிகம் சார்ந்த சிறந்த மேலாண்மைக் கூறுகளைக் கொண்ட இரட்டைக் காப்பியங்களைப் பற்றிக் இக்கட்டுரையில் காண்போம்.

**எது வணிகம்:**

தன் தேவைக்கு மிஞ்சிய பொருட்களைப் பிறருக்குக் கொடுத்து, அதற்குப் பதிலாகப் பிறரிடம் இருந்து பொருட்களைப் பெறும் முறைக்குப் பண்ட மாற்று முறை என்று பெயர். இந்தப் பண்டமாற்று முறையே பிற்காலத்தில் பெரும் வணிகமாக வளர்ந்தது. சமூகத்துடன் தொடர்புடைய வணிகர்களைப் பற்றித் திருக்குறள்,

“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி
பிறவும் தமபோல் செயின்” (குறள்: 120)

என்று கூறுகின்றது. வாணிகத்தில் ஈடுபடுகிறவர்கள் பிறர் பொருளையும் தம் பொருள் போல் எண்ணி வாணிகம் செய்ய வேண்டும் என்றும் வணிகத்துக்கும், வணிகர்களுக்கும் சில அறங்களைச் செய்ய வேண்டும் என்றும் திருக்குறள் வலியுறுத்துகின்றது. “இம்மைச் செய்தது மறுமைக்கும் ஆம் எனும் அறவிலை வணிகன்” என்று புறநானுற்றுப் பாடல் இப்பிறவியில் அறம் செய்வதால் அது மறு பிறப்பிலும் நன்மையைத் தரும் என்பது போல வணிகர்கள் அறம் தவறிய வழியில் வணிகத்தை மேற் கொள்ளுதல் கூடாது.என்பதை உரைக்கின்றது. யாருக்கு அறம் செய்ய வேண்டும் என்பதனை மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார்,

“ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வார்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (மணி.11:93-96)

வரையறுத்துள்ளார். கைம்மாறு கருதிச் செய்யப்படுவதும், மறுமையில் பலன் தரும் என்று எதிர்பார்த்துச் செய்யப்படும் எதுவும் வணிகம் என்றே கூறப்படுகின்றது. இவர்களை ‘அறவிலை வணிகர்’ என்று குறிப்பிடுகின்றனர். மேலும் வணிகரின் பண்பாகத் திருக்குறளில்,

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி” (குறள்: 118)

எடை அளக்கும் துலாக்கோல் போல, வணிகர்கள் வணிகத்திலும் அறம் பிறழாமல் சம

நிலையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது.

**சிலப்பதிகாரமும் வணிகமும்:**

காவிரிப் பூம்பட்டினம் ஒரு சிறந்த பன்னாட்டு வணிக மையமாக அக்காலங்களில் சிறந்து விளங்கியிருப்பதைக் காப்பியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். பல்வேறு அயல் நாடுகளில் இருந்தும் வணிகர்கள் இங்கு வந்து ஒரு தேசத்தார் போலக் கலந்திருந்து வணிகம் செய்து வந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத் துறைமுகமாக விளங்கிய காவிரிப் பூம்பட்டினம் பல மொழிகள் பேசும் மக்களனைவரையும் ஒருங்கிணைத்துத் தங்களது பண்பாடு, நாகரிகம் இவற்றைப் பாதுகாத்து வணிக நிர்வாகத்தில் சிறந்து விளங்கி தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொண்டனர் என்பதைச் சிலப்பதிகாரம்,

"பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம் பெயர் மக்கள்
கலந்தினி துறையும் இலங்கு நீர் வரைப்பும்" சிலம்பு (5:10-12)

என்ற பாடல் வழி எடுத்துரைக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் கோவலனின் தந்தையாரான மாசாத்துவானைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது அவன் சோழ அரசனுக்கு அடுத்த படியாகப் பெருங்குடி மக்களில் முதல் குடிமகனாக இருந்தமையும், அக்காலத்தில் பெருங்குடி வணிக மக்கள் செல்வச் செழிப்பில் அரசனுக்கு நிகரான வளத்தைப் பெற்றிருந்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இதனை,

"பெரு நிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடுஉயர்ந்தோங்கு செல்வத்தான்
வரு நிதி பிறர்க் காற்றும் மாசாத்துவா னென்பான்
இரு நிதிக்கிழவன் மகன் ஈரெட்டாண் டகவையான்"

(சிலம்பு, மங்கலவாழ்த்து)

என்று பகர்கின்றது.

**மணிமேகலையில் வணிகம்:**

மணிமேகலையில், ஆதிரை பிச்சையிட்ட காதையில் சாதுவன் என்பான் வணிகம் செய்வதற்காகக் கப்பலில் பயணம் செய்தது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலில் வணிகம் செய்பவர்களை 'நாவிகர்கள்' என்று அழைக்கின்றனர். இவர்கள் கடல் தெய்வமான மணி மேகலா தெய்வத்தின் மேல் நம்பிக்கை கொண்டு கடல் வாணிகத்தை மேற்கொண்டிருந்தனர். சாதுவன் கடல் வாணிகம் செய்யச் சாவக நாட்டிற்குக் கப்பலில் பயணம் மேற்கொண்ட பொழுது, நாகர் மலைத்தீவில் புயலில் சிக்கிக் கப்பல் கடலில் மூழ்கியதாகவும், நாகர் மலைத் தீவில் ஒரு மரத்தைப் பற்றிக் கரை சேர்ந்ததாகவும் கடல் தெய்வமான மணிமேகலா தெய்வம் சாதுவனைக் காப்பாற்றியதாகவும் காப்பியத்தின் வழி

அறியமுடிகின்றது. இதனை,

“நளியிரு முந்நீர் வளிகலன் வவ்வ
ஒடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்கசாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மையன் ஆயினன்” (மணி, 16: 13-16)

என்று கூறுகின்றது. மேலும் பாண்டிய நாட்டிலிருந்து தமிழர் சாவக நாட்டுக்குச் சென்று வணிகம் செய்து திரும்பியதைப் பற்றி,

“மாநீர் வங்கம் வந்தோர் வணங்கி
சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்தது உரவோய் என்றலும்”

(பாத்திரமரபு கூறிய காதை 76)

மனிமேகலைக் காப்பியம் உரைக்கின்றது.

**எட்டிப் பட்டம்:**

பண்டைக் காலத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் வணிகத்தையும், வணிகர்களையும் ஊக்குவித்துச் சிறப்பாக வணிகம் செய்து பெருஞ் செல்வத்தை ஈட்டிய வணிகர்களுக்கு எட்டிப் பட்டமும், எட்டிப்பூ மாலையும் அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள். எட்டிப்பூ என்பது பொற்பூ. பொன்னால் செய்யப்பட்ட தங்கப் பதக்கம் போன்ற அணி வகை. என்பதனைச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் குறிப்பிட்டுள்ளன.

“எட்டி சாயலன் இருந்தோன் தனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில்”

(சிலம்பு, அடைக்கல காதை 163-164)

என்று சிலப்பதிகாரமும்,

“வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
நீள் நிதிச் செல்வனாய் நீணில வேந்தனில்
எட்டிப் பூப்பெற்று இருமுப்பதிற் றியாண்டு
ஓட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினான்”

(மணி, 22: 111-114)

என்று மணிமேகலையும் வணிகர் பற்றியும் வணிகச் சிறப்பு பற்றியும் எடுத்துரைத்துள்ளன.

**தொகுப்புரை:**

1. காப்பியங்களின் வழி பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையையும் , வணிகம் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்திக் கொண்டது தெரியவருகின்றது.
2. வணிகர்கள் அந்நாட்டின் முதுகெலும்பாக இருந்து வந்தனர்.
3. காப்பிய காலங்களில் நடைபெற்ற உள்நாட்டு வாணிகத்தைப் பற்றியும் வெளிநாட்டு வாணிகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.
4. அயல் நாட்டு வாணிகர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து வாணிகம் செய்ததோடு மட்டுமல்லாமல் பல்வேறு மொழி பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு தேசத்தார் போல வாழ்ந்து வந்ததை அறிந்து கொள்ளலாம்.
5. அக்கால மக்களின் வணிகத் திறனையும், பொருளாதார வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகின்றது
6. தமிழ் மன்னர்கள் எட்டிப் பட்டம் மற்றும் எட்டிப்\பூ மாலையையும் சூட்டி வணிகத்தையும் வணிகர்களையும் ஊக்குவித்தனர். மேலும் அவர்களைப் பெருமைப்படுத்திச் சிறப்பும் செய்தனர் என்பதும் அறியப்படுகின்றது.

**துணைநூற் பட்டியல்**:


1. சிலப்பதிகாரம் – எல்லோருக்குமான எளிய உரையுடன், ஆசிரியர். ப. சரவணன், சந்தியா பதிப்பகம், எண்: 77, 53 வது தெரு, அசோக் நகர், சென்னை – 600 083. பதிப்பு - 2008
2. மணிமேகலை – புலமை வேங்கடாசலம், பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை – 600 014, முதல் பதிப்பு - டிசம்பர் 2007.
3. திருக்குறள் பொருள் விளக்கம், சாமி சிதம்பரனார், சாரதா பதிப்பகம், சென்னை – 14. முதல் பதிப்பு: 2014.
4. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 1, (அ-ஔ) சாரங்கபாணி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் , 2001.